# அம்மாவின் பிள்ளை



தி. உதயசூரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் பிள்ளை



திரு.உதயசூரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : அம்மாவின் பிள்ளை

ஆசிரியர் : தி.உ.தயசூரியன்

அட்டையில் : அம்பிகை

முதற்பதிப்பு : 2009 பங்குனி

வெளியீடு : கல்வி மற்றும் அறிவாராய்ச்சியியல் செயலாடல்களுக்கான மேகலா நிலையம்

அச்சுப்பதிப்பு : மல்ரிவிஷன்அச்சகம் வவுனியா. 024 2223669

விலை : 30/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மாவின் பிள்ளை

அம்மா, நான் வந்த நேரந்தொடக்கம் உம்மென்று கொண்டு நிக்கிறா.

"மழைக்காலம் மேனகா வீட்டில் நின்று மினக்கெடாமல் வந்திடவேணும்"

என்று அவ சொல்லிவிட்ட மாதிரியே நான் நேரத்துக்கு

வந்துவிட்ட போதிலும் அம்மா என்னுடன் ஒன்றும் கதைக்கிறாவில்லை.

அவவுக்குப் பிடிக்காத எதையோ நான் செய்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது நான் போன பிற்பாடு வீட்டில் ஏதாவது நடந்திருக்க வேண்டும்.

நான் போவதற்கு முன்னதாக, “வெயில் மினுங்குது. நான் உடுப்புகளைத் தோய்க்கின்றேன், பிள்ளையின்ர பள்ளிக்கூட சட்டைகளை எடுத்துத்தாடா குஞ்சு” என்று அம்மாதான் என்னுடைய சட்டைகளை எடுத்துத் தரும்படி கேட்டவ.

அதெல்லாம் கவனமாகக் கழுவிக் காயப் போட்டிருக்கு.

அம்மாவின் சாறி ஒன்று, சட்டை ஒன்று, பாவாடை ஒன்றுடன் உட்சட்டை ஒன்றும் கழுவிக் காயப் போட்டிருக்கு.

ஒருவேளை என்னுடைய இரண்டு சட்டைகள் தோய்த்தது அம்மாவுக்குக் கோவம் வந்திருக்கலாம்.

அம்மாவின் ஒழுங்கின்படி எல்லா உடுப்புக்களும் தூய்மையாக இருக்கவேண்டும்.

பாவித்த ஒரு உடுப்பைக் கழுவி வைத்து விட்டுத்தான் மற்ற உடுப்பை எடுத்துப் பாவிக்கவேண்டும்.

அதனால் அம்மாவின் எல்லாச் சாறிகளும் சட்டைகளும் எப்போதும் தூய்மையாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை மட்டும் தொடர்மழை காரணமாகப் பாவித்த சட்டையைத் தோய்த்து வைக்காமல் அடுத்த சட்டையையும் பாவித்துவிட்டேன்.

அதுக்காக அம்மா இப்படி உம்மென்று கொண்டு நிற்பது கொஞ்சங்கூடச் சரியில்லை.

"ஏன் அம்மா என்னுடன் கதைக்கிறியள் இல்லை" என்று நான் கேட்டால்,

"கதைத்துப் பயனில்லை"என்று முகத்தில் அடித்தமாதிரிப் பதில் சொல்லுவா.

பிறகு நான் ஏதும் சொல்ல அவவின் கோவம் கூடிவிடும்.

அது வேண்டாம்.

இந்தநேரம் பெரியம்மா வீட்டையும் போகேலாது. பேசாமல் இருந்து படிப்பம்.

பிள்ளை படிக்குது என்றால் அம்மாமாருக்குச் சந்தோசம்.

உண்மைதான் அம்மா தன்னைச் சாந்தப்படுத்திக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குக் கிட்ட வாறா.

அம்மா இப்ப என்னுடன் கதைப்பா. எனக்குச் சந்தோசமாக இருக்கும்.

இஞ்ச பாருங்கோ அவவ.

கிட்ட வந்தவ என்னுடன் ஒன்றும் கதைக்காமல் மேசையின் ஒரு மூலையில் கிடந்த ஆமைப்பூட்டை எடுத்துக்கொண்டு போகிறா.

அவகேற்றுப் பூட்டப் போகிறா.

அவவின் கோவம் இன்னும் தணியேவில்லை.

இராவிருட்டி நேரம் மழையும் தூறல் விழுகுது. அவ இருட்டுக் குள்ளால கேற்றடிக்குப் போறா. நேற்றுப் பின்னேரமும் கேற்றடியால விசப்பாம்பொன்று போனது.

நான் அம்மாவின் பிள்ளை.

நான் அம்மாவுக்குத் தேவையில்லை என்றாலும் அம்மா எனக்குத் தேவை.

அவவுக்கு ஒன்றென்றால் நான் தாங்கமாட்டன்.

அவ இல்லாமல் நான் வாழ மாட்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ இருட்டுக்குள் போவதை நான் பார்த்துக்கொண்டு இருக்க மாட்டன். விளக்கைத் தூக்கிக்கொண்டு அவவுக்குப் பின்னால் போகப் போறன்.

வழக்கமாக என்றால் "செல்லம் வாடா கேற்றுப் பூட்டிவிட்டு வருவம்"

என்று என்னைக் கேட்பா. நான் விளக்கைத் தூக்கிக்கொண்டு அவவுக்கு முன்னால் போவேன். இன்று மட்டும் அவ தனிய இருட்டுக்குள் போகிறா.

என்னதான் நான் பிழைசெய்திருந்தாலும் என்னிடம் சொல்லித் திருத்தலாம் தானே. அதைவிட்டிட்டு இப்பிடி மூஞ்சையை நீட்டிக்காட்டி என்னையும் வருத்தித் தானும் வருந்துறா. உப்பிடியே நெஞ்சுக்குள் வைத்திருந்து வைத்திருந்து அவவின் உடம்பும் மனமும் கெட்டுப் போகுது.

சரி என்ன வந்தாலும் வரட்டுக்கும். நான் இப்ப விளக்கையும் கொண்டு அவவுக்குக் கிட்டப் போக இரண்டில் ஒன்று தெரியும். அவவின் விருப்பமில்லாமலே அவவுக்குக்கிட்ட விளக்குக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்டாக வைத்து மனதுக்குள் இருக்கிற எல்லாவற்றையும் வெளியில கொட்டுவா.

இல்லையென்றால் நல்ல அடி அடிப்பா.

அடிக்கட்டும்.. நான் வாங்குவன். நான் அம்மாவின் பிள்ளை.

"அம்மா என்ன உங்கட பழக்கம்?"

என்னையும் மீறி நான் அம்மாவிடம் கேட்டுவிட்டேன்.

நான் விளக்குக் கொண்டு வாறது தெரிந்த அம்மா உடனே திரும்பி வீட்டிற்குள் போவதைக் கண்டு நான் கேட்டதற்கும் பதில் சொல்லாமல் அவ படிக்கிற மேசைக்குக் கிட்டப் போய் இருக்கிறா.

நான் ஏதும் உப்பிடிச் செய்தால்,

"செல்லம் வரவர நல்ல பழக்கங்கள் பழகுது.

உப்பிடிச் செய்யிற தெண்டால் சொல்லாமல் கொள்ளாமல் வெளிநாட்டுக்குத்தான் போவன்" என்று சொல்லிச் சத்தம்போட்டுக் கத்திப் பயப்பிடுத்துவா பதிலுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“போங்கோ நல்லாப் போங்கோ. போறதென்றால் என் பிணத்தைக் கடந்துதான் வீட்டுக்கு வெளியால போவீங்கள்” என்று நான் சத்தமில்லாமல் சொல்லுவன். இப்பபார்த்தால் அம்மாதான் நல்ல பழக்கங்கள் பழகிக்கொண்டு வந்திருக்கிறா போல இருக்கு.

கொஞ்சம் பொறுங்கோ, அம்மா ஏதோ எழுதுறா, எழுதட்டும்,

அவவின் நெஞ்சுக்குள் இருக்கின்ற எல்லாவற்றையும் எழுதிக் கொட்டட்டும்.

நான் பேசாமல் இருந்து படிக்கப் போறன்.

உங்க பாருங்கோ அம்மா அழுகிறதை.

அம்மாவின் கண்ணீர் விழுந்து எழுதுகிற பேப்பரும் நனையுது.

“அம்மா அழாதையுங்கோ அம்மா.

உங்கட செல்லம் நான் இருக்கிறன். அழாதையுங்கோ அம்மா.

கண்ணகி ஆச்சி எங்களைக் கைவிட மாட்டா.

நீங்கள் அழவேண்டாம் அம்மா” என்று நான் அம்மாவுக்கு ஆறுதல் செல்லி அம்மாவின் கண்ணீரைத் துடைத்து விட்டேன்.

“நான் எப்பனுக்குச் சரிந்து படுக்கப் போறன்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதைச் என்று ஒரு வார்த்தை மட்டும் சொல்லிவிட்டு அம்மா எழுந்து போய்விட்டா.

அவ எழுதின பேப்பர் அப்படியே மேசையில் இருக்கு.

எடுத்து வாசித்துப் பார்த்தால் அம்மா ஏன் அழுதவ என்று தெரியும்.

அம்மா ஏதாவது எழுதினால் அதை வாசித்துப் பார்க்கிற முதல் ஆள் நான்தான். அதுபோலவே எனது எழுத்துக்களை வாசித்துப் பார்க்கிற முதல் வாசகி எங்கட அம்மாதான்.

வாசித்துத் திருத்தங்கள் செய்வா. என்ன என்ன விடயங்களை எழுதவேண்டுமென்று சொல்லுவா.

இறைவன் மீது மெய்யான பக்தி, இயற்கைவளம், சுற்றாடல் பாதுகாப்பு, பண்பாடு, மனிதநேயம் என்பவை பற்றிய நேர்மனப்பாங்கினை உருவாக்கும் எழுத்துக்கள் அம்மாவுக்குப் பிடித்தமானவை. கல்வியும் இவற்றையே வலியுறுத்த வேண்டும் என்று அம்மா சொன்னவ.

எழுத்து எதுவானாலும் இறுதி உண்மையைக் கண்டுகொள்ளும் தேடல் அந்த எழுத்தில் உட் பொதிந்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா சொல்லுறபடியே வாழவும் விரும்புகிறவ.

ஒருநாள் முருகண்டிப் பிள்ளையாருக்குப் கற்பூரம் கொழுத்தும் போது கற்பூரம் சுற்றிவந்த கடதாசியை கோயிலடியில் போடாமல் வீட்டிற்குக் கொண்டு வந்தவ. அது ஏன் என்று கேட்க

"கோயிலடியை அசுத்தப்படுத்தக் கூடாது. ஆளுக்கொரு கடுதாசி என்று கோயிலடியில் எல்லாரும் போட்டால் கோயிலடி அசுத்தமாகிவிடும்" என்று சொன்னவ. அன்றிலிருந்து அம்மாவையே நானும் பின்பற்றுகின்றேன். இப்ப அம்மா எழுதியதைப் பார்த்தால் அவவின்ர எழுத்து நடையையும் பின்பற்றலாம்.

*"மழை வெயில் கண்ணைப் பறிக்குது. காலைமுதல் மப்பும் மந்தாரமுமாக இருந்த வானம் தற்காலிகமாக வெளுத்திருக்கிறது.*

*இயற்கைக்குத்தான் எவ்வளவு கருணை.*

*ஓயாது மழை கொட்டினால் மனிதர்கள் தமது கருமங்களைச் செய்யமுடியாது முடங்கிவிடுவார்கள் என்பதனால் இடையிடையே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயில் எறிக்கிறது. இப்போதய எறிப்பைப் பயன்படுத்தி உடுப்புகளைத் தோய்த்துக் காயப் பண்ணிப்போட வேணும். பிள்ளையின்ர வெள்ளைச் சட்டைகள் இரண்டையும் முதலில் தோய்க்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டு அவற்றை நனைத்துச் சவர்க்காரம் போடும் போது தான் அந்தக் கறள் ஆணி என் கைவிரலிற் குத்தச் சுள்ளென்று வலித்தது. உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையுள்ள எல்லா நரம்புகளும் அதிர்ந்து செயலறுந்தது போலிருந்தது எனக்கு.

கண்கள் கலங்கி பொலுபொலுவெனக் கண்ணீர் வடிந்தது.

மலேரியாக் காய்ச்சல் நோய் இருக்குதோ எனப் பரிசோதிப்பதற்கு ஊசியால் குத்தும் போது வருவதுபோல் குமிழியாக இரத்தம் வந்தது. இந்த நேரம் பார்த்து என் செல்லமகள் வீட்டில் இல்லை.

நின்றிருந்தால் கொய்யாத் தடியால நல்ல மங்களம் வாங்கியிருப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரட்டுக்கும் இரவு சாப்பிடக் கூப்பிட்டு இருத்திவிட்டு அகப்பைக் காம்பால நாலுக்காறு குடுக்கிறன்.

என்ன இது? ஒரு சட்டைக்குள் கறள் ஆணி இருக்குதென்று பார்த்தால் மற்றச்சட்டைப் பொக்கற்றுக்குள் உலகத்துக் குப்பைகள் எல்லாம் இருக்கு.

வாழைப்பழத்தோல்,
ரொபிக்கடதாசி,
பேரீச்சம்பழக் கொட்டை.
கச்சான் கோது

போயும் போயும் ஒரு விசர்பெட்டையை எல்லோ பெத்து வைச்சி ருக்கிறா

என்று சிலபேர் நாக்கு வளைக்கிறவை.

கோடானு கோடி அல்ல. சில்லறையான சில்லறைகள் கிடைத்தாலே வளையக் கூடியது கள். அப்பிடி வளைக்குதுகள் என்று பார்த்தால், அது உண்மை என்று நிரூபிக்கவெல்லோ பிள்ளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாடுபடுகுது போல இருக்கு.*

*என்னால இனி இயலாது.*

*நான் தாங்கமாட்டேன்,*

*நான் இனி வாழவே மாட்டேன்.*

*பிள்ளையாரப்பா!*

*நான் இந்த உலகத்தைவிட்டே போகப்போறன்.*

*சிறகால மூடி செஞ்சோடு அணைத்து இந்த நிமிடம் வரை பாதுகாத்த எனது பொன் குஞ்சை இனி நீதான் காவாந்து பண்ண வேண்டும்.*

அம்மா.....

பிள்ளையாரே......

அம்மாவுக்கும் மறதி, எனக்கும் மறதி.

பிள்ளையார் கோயில் குருக்கள் ஐயா வாழைப்பழம் தந்தவர். அந்தத் தோலை கோயிலடியில் போட்டு அசுத்தப்படுத்தக்கூடாதென்று சட்டைக்குள் வைத்ததை வீட்டில் வந்ததும் கன்றுக் குட்டிக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க மறந்து விட்டேன்.

பள்ளிக்கூடம் வாற பிள்ளைகளின் சைக்கிள் காற்றுப் போகட்டும் என்று வாசலில் யாரோ ஆணியை நிமிர்த்தி நட்டு வைத்தவை. அதைநான் பிடுங்கி எடுத்ததை அம்மாவுக்குச் சொல்ல மறந்து போனேன். அதுதான் சட்டைக்குள்ளிருந்து அம்மாவின் கையில் குத்தியிருக்கு.

பெரியம்மா வீட்டில பேரீச்சம்பழம், சாப்பிடத் தந்தவ. பெரியம்மா வீட்டில போடக் கூடாதென்று நான் பேரீச்சம்பழக் கொட்டையைக் கையில் எடுத்துச் சட்டைக்குள் வைத்ததை மறந்து போனேன்.

பல பல யோசனைகளால் அம்மாவுக்கு மறதி. அம்மாவை நினைத்து நினைத்து எனக்கு மறதி.

கொஞ்ச நாளைக்கு முன் வெளிநாட்டுக்குப் போகப்போறன் என்றவ. இப்ப உலகத்தை விட்டே போகப் போறன் என்று எழுதுகிறா. இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமாக இல்லை.

அம்மா என்னைவிட்டு விட்டு எங்கேயும் போகமாட்டா.

நான் அம்மாவின் பிள்ளை.

மற்றவர்களைப் பற்றி நாக்கு வளைக்கிறவர்கள் என்ன வேண்டுமென்றாலும் சொல்லி விட்டுப் போகட்டும்.

நான் எங்கட அம்மாவின் பிள்ளையாக இருக்கிறேன்.

பெரியம்மாவின் பிள்ளையாக இருக்கின்றேன்.

கண்ணகி ஆச்சியின் பிள்ளையாக இருக்கிறேன்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mother is first Teacher

Teacher is Second Mother

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org